சுகுண

உத்தம பத்தினிகள்

Y15ശx
N24
181832

705

உத்தம பத்தினிகள்.

[முதற் பாகம்]

சந்திரமதி, ஸாவித்ரீ, சகுந்தலை, தமயந்தி,
நாளாயனி, தடாதகை, தடாலை, சீதை,
ஆகிய எட்டு உத்தமிகளின் சரிதம் அடங்கியது.

முன் இரண்டு வருஷங்களுக்கு மேற்பட்ட காலம்
வாணியம்பாடி இஸ்லாமியா ஹைஸ்கூலில்
இருக்கையில் மெட்ரிகுலேஷன் வகுப்புக்கு
இங்கிலீஷ் போதனாசிரியரா யிருந்தவரும்,

"இஹாபரானந்தம்," "எல்லாம் அறிவோம்,"
"ஸெக்ரெட் தாட்ஸ்," "டைஸன் மொழிகள்,"
"ஸ்ரீமகா பாரத வசனம்," "(இங்கிலீஷ்) பாரதம்,"
"சக்வாலீலை" முதலிய பல புத்தகங்களின்
ஆசிரியரும் ஆகிய

கா. சு. சேஷகிரி அய்யர்

இயற்றி வெளியிட்டது.

15 சித்ரகுளம் கிழண்டை வீதி,
மயிலாப்பூர்.

(முதற் பதிப்பு)

1924

[விலை 2 அணா.

12 MAY 1924

Y15wx
N24.
181832

அட்டவணை.

		பக்கம்.
1.	சந்திரமதி	1—3
2.	ஸாவித்ரீ	3—5
3.	சகுந்தலை	5—7
4.	தமயந்தி	7—10
5.	நாளாயணி	10—11
6.	தடாதகை பிராட்டியார் ...	12—14
7.	சூடாலை	14—16
8.	சீதை	17—21

அடியில் காணும் தமிழ்ப் புத்தகங்கள் வேண்டுவோர்.
இப்புத்தக ஆசிரியருக்கு எழுதலாம்.

1. ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளின் சரித்ரமும் உபதேசங்களும். (விலை 8 அணா)
2. மனிதனது உண்மை ஸ்வரூபம். (விலை 6 அணா)
3. ஈச்வரானுக்ரஹத்தையும் பேரானந்தத்தையும் பெறுவதற்குரிய வழி. (விலை 4 அணா)
4. ஐம்பது சிறு கதைகள். (விலை 2 அணா)
5. ஷண்முக மஹிமை (முதற் பாகம்.) விலை 12 அணா.
6. ,, (இரண்டாம் பாகம்.) விலை 12 அணா.

மேற்கூறியவற்றில் 1, 2, 3, 5, 6 குறிப்பிட்டுள்ள புத்தகங்களில் திவ்யமான படங்கள் காணலாம்.

இவ்வாறு புத்தகங்களில் முதல் நான்கையும் எழுதியவர், திருவண்ணாமலை ரெட்டைப் பிள்ளையார்கோவில் வீதியிலிருக்கும் எஸ். நாராயண ரெட்டியார். கடைசி இரண்டையும் எழுதியவர் மயிலாப்பூர் மந்தை வெளித் தெரு 14-நம்பர் வீட்டில் உள்ள,

L. S. விச்வநாதய்யர்.

14 MAY 1924

ஓம்
ஸ்ரீ ரமண பரமாத்மனே நம:

உத்தம பத்தினிகள்.

[முதற் பாகம்.]

(1)

சந்திரமதி.

சந்திரமதி கன்னபுரி ராஜனுடைய மகள். அவளை அயோத்தி மன்னன் ஹரிச்சந்திரன் கல்யாணம் செய்து கொண்டான்.

"ஹரிச்சந்திரனைப் போன்ற சத்திய சந்தன் மூன்று லோகத்திலும் இல்லை" என்று இந்திர ஸபையில் வசிஷ்டர் கூறினர். "அவனை ஸத்யம் தவறச் செய்கிறேன்" என்று விச்வாமித்ரர் சொன்னர்.

ஹரிச்சந்திரனைப் பொய்யனாக்க விச்வாமித்ரர் பல விதத்தில் முயன்றார். அவனது ராஜ்யத்தைத் தந்திரமாய்ப் பிடுங்கிக் கொண்டார். மனைவி மகனுடன் அவனைக் காட்டில் துரத்தினர். நக்ஷத்ரீயனால் கஷ்டப்படுத்தினர். பிறகு சந்திரமதியை காலகண்டன் என்னும் ப்ராஹ்மணனுக்கு அடிமையாக்கினர். வீரபாகு எனும் பறையனுக்கு ஹரிச்சந்திரனையும் அடிமையாக்கினர். லோகிதாக்ஷன் எனும் குழந்தையை பாம்பு கடித்து இறக்கும்படி செய்தார். திருடர்களால் கொல்லப்பட்ட காசி ராஜனது குமாரனை சந்திரமதியே கொன்றதாகப் பொய் சாக்ஷி ஏற்படுத்தினர். அவ்வரசனும் சரியாய் விசாரிக்காமல், சந்திரமதியைக் கொலை

செய்து விடும்படி வீரபாகுவினிடம் அனுப்பினான். வீரபாகு அவனை ஹரிச்சந்திரனிடம் அனுப்பினான்.

உத்தம பத்தினியாகிய சந்திரமதி பலவித கஷ்டங்களைப் பொறுத்தாள். ராஜ்யத்தை யிழந்தபின் காட்டில் பொறுக்க முடியாத துயரங்களை யடைந்தாள். கால கண்டியிடம் பட்டபாடு, மிகக்கொடிய மாமியார்களிடம் படுவதைவிட கஷ்டமாயிருந்தது. எல்லாவற்றையும் ஸஹித்தாள். பாம்பு கடித்து இறந்த தன் குமாரனது பிரிவை மாத்திரம் பொறுக்க முடியவில்லை. இரவு 10 நாழிகைக்கு மேல் காட்டுக்குப்போய் லோகிதாக்ஷனது உடலைச் சுட முயன்றாள். அங்கு காவலாயிருந்த ஹரிச்சந்திரன், "பணமும் துணியும் கொடுத்தால்தான் பிணத்தைச் சுடலாம்" என்று கூறி அவளைக் காலகண்டனிடம் அனுப்பிவிட்டான். தன் மனைவியென்று தெரிந்துங் கூட, எஜமானனுக்குச் சேரவேண்டிய பணமும் துணியும் கொடுத்தாலொழிய ப்ரேதத்தைச் சுடக்கூடாதென்று சொல்லிவிட்டான்.

சந்திரமதி வீடுநோக்கிப் போகையில் போலீஸ்காரர் அவளைப்பிடித்து, காசிராஜ புத்ரனை அவளே கொன்றதாக ருஜூப்படுத்தி விட்டார்கள். அரசனால் மரண தண்டனை விதிக்கப் பெற்ற சந்திரமதியைக் கொல்ல, வீரபாகுவின் அடிமையான ஹரிச்சந்திரன் வாளை ஓங்கினான். விச்வாமித்ரர் அங்கு வந்து அவனைத்தடுத்தார் "இப்பொழுதாவது ஒரு பொய் சொல்லி விடு; உன் ராஜ்பத்தையும் கொடுக்கிறேன்; இறந்த உன் புத்ரனையும் எழுப்பி விடுகிறேன்"

சந்திரமதி தன் கணவனைநோக்கி "நாதா! பதியை யிழந்தோம்; பாலனை இழந்தோம்; ப்ராணனையும் இழக்கலாம் ஆனால் ஸத்யத்தை மாத்திரம் கைவிடக் கூடாது" என்றாள்

18832

ஹரிச்சந்திரன் தன் பத்தினியின் கழுத்தின் மேல் வாளை வீசினான். அவ்வாள் மலர்மாலையாக மாறிற்று. 33 கோடி தேவதைகளும் நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளும் தம்மைச் சூழ, பரமசிவன் பார்வதி சமேதராய் ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளினார். இறந்த லோகிதாக்ஷனையும் காசிராஜன் புத்ரனையும் எழுப்பிவிட்டு ஹரிச்சந்திரனை ஆசீர்வதித்ததும், பகவான் மறைந்தார்.

விச்வாமித்ரர் அவமான மடைந்தார். ஹரிச்சந்திரன் தன் ராஜ்யத்தை அடைந்து வெகுநாள் அரசுபுரிந்து கடைசியில் ஸ்வர்க்கலோகம் சென்றார். [இக்கதையை விஸ்தாரமாய்ப் படிக்கக் கோரினால் எனது மஹாபாரத வசனம் (முதற் பாதியில்) காணலாம்.]

---

(2)
ஸாவித்ரீ.

மத்திர ராஜனாகிய அச்வபதியின் புத்ரி ஸாவித்ரீ. ஸரஸ்வதியின் அருளால் பிறந்த இவள் 64 கலைகளையும் கற்றவள். ஸத்குணம் நிறைந்தவள். இவளுக்குத்தக்க கணவன் வெகுநாள் வரையில் கிடைக்கவில்லை.

தனது ராஜ்யத்தையும் கண்களையும் இழந்து காட்டில் வஸிக்கும் த்யுமத்ஸேன ராஜனது குமாரன் ஸத்யவான் என்பவன். ஸத்குணம், தைர்யம், அழகு முதலியவற்றில் ஸாவித்ரிக்குத் தக்க கணவன். ஸாவித்ரீ ஸத்யவானைப் பார்த்ததும் அவனையே தன் பர்த்தாவாக மனதில் நினைத்தாள். "அவன் இன்னும் ஒரு வருஷந்தான் உயிரோடிருப்பான்"

என்று நாரதர் கூறினார். அச்வபதியும் தடுத்தார். ஆனால் ஸாவித்ரீ ஒரேமனதாயிருந்து ஸத்யவானையே மணந்தாள்.

காட்டுக்குப் போய் குடிசையிலிருந்து சாதாரண ஸ்த்ரீ போலவே ஸகல பணிவிடைகளையும் புருஷன், மாமனார், மாமியார்களுக்குத் தானே செய்து வந்தாள். ஸத்தியவானது மரண தினத்துக்குச் சிலநாள் முன்னாகவே கௌரீ வ்ரதம் ஆரம்பித்தாள்.

ஒருநாள் சாயங்காலம் யமன் வந்து அவளது கணவனுயிரைக் கொண்டுபோகையில், தானும் அவரைத்தொடர்ந்தாள். அவளது பதி பக்திக்கு மெச்சிய யமன் சில வரங்களை அளித்தார். அவற்றால் த்யூமத்ஸேனனுக்குக் கண்களும் ராஜ்யமும் கிடைத்தன. ஸாவித்ரிக்குத் தம்பிமார்கள் பிறக்கட்டும் என்றும் வரம் கொடுத்தார். மறுபடியும் தன்னை விடாது தொடர்ந்த அணங்கைப் பார்த்து யமன், "அம்மா, நீ வருவது சரியல்ல. மனிதர் நடக்க முடியாத பாதையில் என்னுடன் வர உன்னால் முடியாது. திரும்பிப்போய் வீடுசேர்" என்றார்.

ஸாவித்ரீ யமனைப்பார்த்து, "ஓ தர்மராஜனே! புருஷனை எப்போது கொண்டுபோகிறாயோ, அப்போதே மனைவியையும் கொண்டுபோகிறவனாகிறாய். ஏனெனில், உடல் இரண்டானாலும் உயிர் ஒன்றேயல்லவா! ஒளியற்ற கண்ணும், மணமிழந்த பூவும், உயிர் நீங்கிய உடலும், பதியிழந்த ஸ்த்ரீயும் இருப்பதைவிட இல்லாமை நன்றல்லவா! என் புருஷனே எனது உயிர்நிலை ஆதலால், எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அவர் இருக்கும் இடத்தில் தான் நானும் இருப்பேன்" என்றாள். பதிவ்ரதா சிரோன்மணியின் உறுதியைப் பற்றி அந்தகன் ஆச்சர்யமடைந்து, "உன் புருஷன் உயிரைத்தவிர

வேறு எந்த வரம் கேட்டாலும் கொடுப்பேன்" என்றார். கற்புக்கரசியான ஸாவித்ரீ, "புத்ரர் வேண்டும்" என்றாள். "கொடுத்தேன்" என்ற யமன் ஓர் அடி எடுத்து வைக்குமுன், ஸாவித்ரீ, "தங்கள் வாக்குப் பொய்யாகாமலிருக்க வேண்டுமானால், என் கணவனைக் கொடுத்தே தீரவேண்டும். புருஷனையிழந்த பதிவ்ரதைக்குப் பிள்ளை எப்படி பிறக்கும்?" என்று கேட்டாள்.

ம்ருத்யு தேவதை அவளது ஸாமர்த்யத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, ஸத்யவானை விட்டு விட்டு, தான் மாத்திரம் யம லோகம் போய்ச் சேர்ந்தார்.

ஸாவித்ரீயும் ஸத்யவானும், பார்வையும் ராஜ்யமும் பெற்ற த்யூமத்ஸேனன் அவனது மனைவியுடன், தமது நகர் போய்ச்சேர்ந்து நெடுங்காலம் சந்தோஷமாய் வாழ்ந்திருந்தனர். மாசி மாதம் முடிந்து பங்குனி மாதம் பிறக்கும் தருணத்தில் மாதர்கள் செய்யும் காரடை நோன்பு ஸாவித்ரீயின் பெருமையையும் ஜயத்தையும் குறிப்பதற்கே. அச்சுப தினத்தில் கௌரீதேவியை ஆராதிப்பவர் ஸாவித்ரீயைப் போலவே தீர்க்க ஸுமங்கலிகளாயிருப்பார்கள் என்பது ஹிந்துக்களுடைய நம்பிக்கை.

---

(3)

சகுந்தலை.

ஈடும் எடுப்பும் இல்லாத அழகையுடைய சகுந்தலை விச்வாமித்ர மஹரிஷியின் புத்ரி. மேனகையின் வயிற்றில் உதித்தவள். கண்ணுவ ரிஷியின் ஆச்ரமத்தில் வளர்ந்தவள்.

ஹஸ்தினாபுரத் தரசனான துஷ்யந்தன் வேட்டையாடப் போன போது ஒருநாள் அவளைப் பார்த்து விட்டான். கண்ணுவ ரிஷியின் ஆச்ரமத்திலேயே சகுந்தலையை விவாஹம் செய்து கொண்டு சிலநாள் அங்கு இருந்தான். சீக்கிரத்தில் அழைத்துக் கொள்வதாய்க் கூறிப் போனவன் பல வருஷங்களாயும் திரும்பி வரவில்லை.

சகுந்தலைக்குப் பரதன் என்னும் குழந்தை பிறந்து 6 வருஷ மாயிற்று. பரதன் புலி சிங்கங்களையும் கூட அலக்ஷியமாய் ஆட்டி வைப்பான். தைரியத்திலும், பலத்திலும் அவனுக்குச் சமானமானவர்கள் யாருமே இல்லை.

புருஷன் வெகுநாளாயும் வராததால் தன் குழந்தையும் தானுமாக சகுந்தலை, துஷ்யந்தனிடம் கண்ணுவரது உத்தரவைப்பெற்றுச் சென்றாள். துஷ்யந்தன் சகுந்தலையை அறியாதவன் போல் நடித்தான். அரச ஸபையில் வந்து தன் வரலாற்றை யுரைத்த சகுந்தலையை மரியாதை யின்றித் தாறுமாறாக அரசன் ஏசிப் பேசினான். தான் வேண்டா விடினும், தன் குழந்தையை யாவது ஏற்றுக்கொள்ளும்படி சகுந்தலை வேண்டினாள். "6 வயது தடியனை குழந்தையென்கிறாயா? போ, போ. இவன் யாருடைய மகனோ! நீ யாரோ! நான் ஒன்றும் அறியேன்" என்று கூறினான் துஷ்யந்தன்.

சகுந்தலையின் துக்கம் சொல்லி முடியாது. "என்னை மணந்த போது கூறிய வர்த்தைகள் எல்லாம் பொய்த்துப் போயினவா! தமது குழந்தையை எடுத்தணைந்து உச்சி முகந்து ஆனந்திப்பதை விட்டு, இப்படிப் பராமுகமாயும் தூஷணையாயும் பேசுவதுதான் அரசரது இயல்போ? தங்களுக்குப்பின்,என் வயற்றில் பிறக்கும் தமது புத்ரனையே அரசனாக்குவதாய் உரைத்த வாக்கு அஸத்தியமாச்சுதா?" என்று

பலவாறு கொதித்துப் பேசினாள் அவ்வுத்தமி. உடனே ஆகாயவாணி, "துஷ்யந்தா! உன் மனைவியாகிய சகுந்தலையையும் உன் புத்ரன் பரதனையும் அன்புடன் அழைத்துக் கொள். ஒரு குற்றமும் செய்யாத சகுந்தலையை இன்னும் பரீக்ஷிக்காமல் அங்கீகரி" என்றாள்.

உடனே சிம்மாஸனத்திலிருந்து இறங்கி ஓடிவந்த துஷ்யந்தன் பரதனை அணைந்துகொண்டு முத்தமிட்டு உச்சி முகந்தான். சகுந்தலைக்கும் ஆறுதல் கூறி அழைத்துக் கொண்டான். "இவ்வளவு பரீக்ஷை செய்யாவிடில் உன் பெருமையும்,கற்பின் திறமும் என் ப்ரஜைகளுக்கு எப்படித் தெரியும்? அதற்காகத் தான் உன்னை அழைத்துக் கொள்ளத் தாமதித்தேன்" என்று கூறினான். சகுந்தலையும் துஷ்யந்தனும் ஆனந்தத்துடன் வெகுகாலம் வாழ்ந்தனர். துஷ்யந்தனுக்கப்புறம் பரதனே அரசன் ஆனான். அவனால் தான் இவ்விந்து தேசத்துக்குப் பரத கண்டம் என்ற பெயர் உண்டாயிற்று.

---

(4)

தமயந்தி

தமயந்தி எனும் பேரழகி விதர்ப்பராஜன் புதல்வி. நிஷத தேசத்தரசனாகிய நளனது பெருமையை ஓர் அன்னப் பக்ஷிபால் அறிந்த தமயந்தி, நளனையே மணக்கக் கோரினாள். இந்த்ரன், யமன், வருணன், அக்னி ஆகிய தேவர்கள் நால்வரும் தமயந்தியை விவாகம் செய்து கொள்ள விரும்பினர். நளனையே அவளிடம் தூதனுப்பினர். தேவர்களின் பெருமையை நளன் கூறினான். நளனையன்றி வேறெவரையும் தன் மனம் நாடாது என்று அவள் கூறிவிட்டாள்.

சுயம்வர மண்டபத்தில் ஐந்து நளன்களைப் பார்த்த தமயந்தி திகைத்தாள். இஷ்ட தெய்வத்தை த்யானித்தாள். பிறகு அவ்வைவரில் ஒருவனது கண்கள் இமைத்தன. அவனுடைய காலடிகள் பூமியிற் பதிந்தன. அவன் அணிந்த மாலை வாடிக்கொண்டு வந்தது. (மற்ற நால்வரும் தேவர்கள் என்று தெரிந்து கொண்டு) நளனுக்கே மாலையிட்டாள். தேவர்களும் மற்ற மன்னர்களும் தம் தம் இடங்களுக்குச் சென்றனர்.

நள தமயந்தியிருவரும் சிலநாள் சுகமாயிருந்தனர். மூன்று குழந்தைகளைப் பெற்று மனங்களித்தனர். கலியின் கொடுமையால் புஷ்கரனோடு சூதாடி ஸர்வத்தையும் தோற்ற நளன், குழந்தைகளைத் தன் மாமனாரிடம் அனுப்பினான். தமயந்தி நளனைப்பிரிந்து போக சம்மதிக்கவில்லை. காட்டில் ஓர் பாழ் மண்டபத்தில் தூங்குகையில், அவளைத் தனியே விட்டு விட்டுத் தான் மாத்திரம் எங்கோ போய் விட்டான். போகும் வழியில், காட்டுத் தீயால் சாக விருந்த ஓர் பாம்பைக் காப்பாற்றினான். அது உடனே அவனைக் கடிக்கவே, நளன் கரி உருவம் அடைந்தான். வாஹுகன் என்ற பெயர் தரித்து அயோத்தி மன்னன் ருது பர்ணனிடம் சென்று, தேர்ச்சாரத்யமும் சமையல் வேலையும் நன்றாய்த் தெரியும் என்று கூறி அவனிடம் வேலையில் அமர்ந்தான்.

காலையில் எழுந்ததும் கணவனைக் காணாத கற்புக்கரசி கதறிக் கதறி யழுதாள். ஓர் பெரிய பாம்பு அவளை விழுங்க ஆரம்பித்தது. அதனை ஓர் வேடன் கொன்றான். தமயந்தியை அணையவந்த அவ்வேடன், அவளது கோபப் பார்வையால் சுடப்பட்டு சாம்பலாய்க் குவிந்தான். பிறகு தனது சிறிய தாயாராகிய சேதி தேசத்தரசியிடம் போய்ச் சேர்ந்தாள். அப்புறம் அங்கிருந்து விதர்ப்ப தேசம் சென்றாள்.

சில ப்ராஹ்மணர்களை ஊர் ஊராய் அனுப்புமுன், "அர்த்த ராத்திரியில் நிர்மானுஷ்யமான காட்டில் சொந்த மனைவியைத் தன்னந்தனியாய் விட்டுப்போவது ஆண்பிள்ளைக்கழகோ? என்று ஆங்காங்கு கூறி, யார் பதில் சொல்கிறானோ அதைத்தெரிவிக்க வேண்டும்" என்று சொல்லியனுப்பினாள். அயோத்தியில் வந்து கூறிய ஓர் ப்ராஹ்மணனை வாஹுகன் கவனித்து. "தனியாய் விட்டுப் போனாலாவது தாய் வீடு சேர்ந்து சுகமாயிருக்கட்டும் என்று போயிருக்கக் கூடாதோ" என்று கூறினான். இவ்வசனத்தை ப்ராஹ்மணன் வாயால் கேட்ட தமயந்தி, வாகுகனே நளன் என்றறிந்தாள். "தமயந்திக்கு இரண்டாம் ஸ்வயம் வரம் நடக்கப்போவதால் உடனே புறப்பட்டு வரவேண்டும்" என்று ருது பர்ண ராஜனுக்குத் தெரிவிக்கச் செய்தாள். காற்றினும் வேகமாய்ப் பறந்தோடும்படி குதிரைகளை ஓட்டிய வாஹுகன் எனும் சாரதியுடன் ருதுபர்ணன் விதர்ப்ப தேசம் சேர்ந்தான்.

தன் குழந்தைகளைக்கண்டு கண்ணீர் சொரிந்த நளன் அவர்களைப் பார்த்து; "என் மக்கள் போல் விளங்கும் நீங்கள் யாருடைய குழந்தைகள்! உங்கள் தந்தை எங்கே?" என்றான். இவ்வசனத்தைத் தாதியால் அறிந்த தமயந்தி, அவனால் அப்போதே சமைப்பித்த உணவின் ருசியாலும் அவன் மொழிகளாலும் அவனே நளன் என்று நிச்சயித்தாள். முன் கடித்த பாம்பை நளன் நினைக்கவே, அது வந்து மறுபடியும் அவனைக்கடித்து அவனது பழைய ரூபத்தைக் கொடுத்துப் போயிற்று. பாதித் துகிலுடன் ராஜஸபையில் நின்றான் பார்த்திபன். "இரண்டாம் ஸ்வயம் வரம் என்பது உண்மையல்ல. நளனை வரவழைக்கத் தமயந்தி செய்த ஓர்

உபாயம்'' என்று ஆகாயவாணியே சொல்லவே, நளனது சந்தேகம் நீங்கிற்று. நெடுநாளாகப் பிரிந்திருந்த நள தமயந்தி யிருவரும் ஆனந்தக்கடலில் மூழ்கினர். பின்பு பழய சூதாட்டத்தாலேயே புஷ்கரனை வென்று ராஜ்யத்தை அடைந்து வெகுகாலம் ஸுகித்திருந்தனர்.

---

(5)

நாளாயணி.

நள மகாராஜனது புதல்வி நாளாயணி. அழகில் ரதிதேவி போன்றவள். கல்வியில் வாணியை நிகர்த்தவள். மன்மதன் போலிருந்த மன்னர்கள் பலர் அவளை நாடிவந்தும், அவளது கேள்விகளுக்கு விடையளிக்க முடியாமல் திரும்பிப் போய் விட்டனர்.

பிறகு வயது சென்ற முனிவரொருவர் வந்தார். அவர் பெயர் மௌத்கல்யர். அவர் மன்மதனை நினைத்து அவனது ரூபத்தைப்பெற்று நாளாயணியிடம் போய், அவளுடைய வினாக்களுக்குத் தக்க பதில் அளித்ததும், அவரை மணக்க நாளாயணி சம்மதித்தாள். தனது மோதிரத்தையும் அடையாளமாகக் கொடுத்தாள். பிறகு அவர் தனது ஸ்வய கிழ ரூபத்துடன் அவளை மணந்தார். ரூபம் மாறியிருப்பதைப் பார்த்த நாளாயணி, தன் மோதிரத்தை அவர் தரித்திருப்பதாலும் முனி ச்ரேஷ்டர் ஆனதாலும், அவரையே கடவுளாகப் பாவிக்கத் தலைப்பட்டாள்.

காட்டில்போய் குடிசையிலிருந்து மிகவும் கஷ்டப்பட்டாள். ஆயினும் அவற்றைக் கஷ்டங்களாகப் பாராட்டவில்லை. தன் மனைவியை சோதிக்கும் பொருட்டு அவர், இல்லாத

வியாதிகளையெல்லாம் வருவித்துக்கொண்டார். உடல் முழுதும் அழுகி புழுக்கள் ஊர்ந்தன. அவர் சாப்பிட்ட இலையில் கோழையும் புழுக்களும் இருக்கும். சிறிதேனும் கூசாமல் அவ்விலையிலேயே தானும் பிற்பாடு சாப்பிடுவள். நாளாயணியின் பதிபக்தியைப்பற்றி மௌத்கல்யருக்கே வியப்புண்டாயிற்று. ஆயினும் அவர் அவளைப்பரீக்ஷிப்பதை நிறுத்தவில்லை. ஓர் தாசியின்மேல் காதல் உற்றதாய் நாளாயணியிடம் கிழவர் கூறினார். அத்தாசியின் வீட்டுக்குச் சிலநாள் போய் அவளுக்கு நாளாயணி பணிவிடைகள் புரிந்து திருப்திசெய்து, தன் புருஷனை ஓர் கூடையில் வைத்துக்கொண்டு தன் தலையில் அக்கூடையைத் தாங்கி, அங்கு கொண்டுபோய் கிழவரை விட்டாள். பிறகு, கூடையில் உள்ள கிழவரைத்தலையால் தூக்கிக்கொண்டு திரும்பி வருகையில், தூக்கு மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஆணிமாண்டவ்யரது கால், கூடையின்மேல் பட்டதும் அவருக்கு வலி அதிகரித்தது. "பொழுது விடிந்ததும் நீ அமங்கிலியாவாய்" என்று அவர் சாபம் கொடுத்தார். இவ்வுத்தம பதிவ்ரதை "பொழுது விடியாமற் போகட்டும்" என்று கூறிவிட்டாள். வெகுகாலம் சூரியன் உதிக்காமற் போகவே, ஸகல ஜீவராசிகளுக்கும் துன்பம் நிறைந்தது. வானோர்களது கோரிக்கைப்படியே, "பொழுது விடியட்டும்" என்று நாளாயணியும், "தீர்க்க சுமங்கலியாய் இருப்பாய்" என்று ஆணிமாண்டவ்யரும், தமது மொழிகளை மாற்றிக் கூறினர். உடனே சூரிய பகவான் உதயமாயினர். ஆணிமாண்டவ்யரது சாபமும் நீங்கிற்று. பிறகு மௌத்கல்யர் தமது பரீக்ஷையை நிறுத்தி நாளாயணியைச் சிலகாலம் சுகிக்கச் செய்தார்.

---

(6)

தடாதகை பிராட்டியார்.

பகவானது கட்டளைப்படியே கடம்ப வனத்தைத் திவ்யமான நகரமாக்கி மதுரை என்ற பெயரை ஏற்படுத்தியவன் குலசேகரபாண்டியன். அவனுடைய புத்ரன் மலயத்வஜ பாண்டியன். மலயத்வஜனது மனைவி காஞ்சனமாலை.—["ஈச்வர லீலை" (அல்லது மதுரையில் நடந்த) சிவ பிரானது 64 திருவிளையாடற் சுருக்கம் எனும் என் புத்தகத்தைப் படித்துப் பார்க்கவும்.]—முன் ஜன்மத்தில் விச்வாவதி எனும் வித்யாதர ஸ்த்ரீயாயிருந்த இவள், பார்வதி தேவியிடம் பக்தி மிருந்தவள். ஈச்வரியே தன் குழந்தையாய்ப் பிறக்கவேண்டும் எனும்வரத்தை அம்பிகையிடம் பெற்றவள். இந்த ஜன்மத்தில் சூர்ய குலத்துதித்த சூரசேனன் மகள் காஞ்சனமாலையாய்ப் பிறந்தவள்.

குழந்தையில்லாமல் வருந்திய மலயத்வஜன் 99 அச்வமேத யாகங்கள் செய்த பின், புத்ரகாமேஷ்டி யாகமும் முடிக்கவே, யாக குண்டத்திலிருந்து மூன்று வயது குழந்தை யொன்று வந்தது. புத்ரனாயில்லாமல் புத்ரியாய் வந்தது ஒரு வருத்தம் மூன்று முலைகளையுடைய குழந்தையாய் ஏற்பட்டது மற்றொரு கன வருத்தம். மலயத்வஜனது துக்கம் நீங்குமாறு ஆகாயவாணி, "ஓ அரசனே! இக்குழந்தைக்குத் தடாதகை என்று பெயரிடு. புத்ரனைப்போலவே அவளை வளர்த்துவா. அவளுடைய கணவன் எதிர்ப்படும்போது இப்பொழுது காணும் மூன்றாவது முலை நீங்கும். அதற்காக நீ விசனப்படாதே" என்று கூறினாள். பாண்டியன் பேரானந்தமடைந்தான். பிராட்டியாரைப் புத்ரன் போலவே வளர்த்து

வந்து பட்டாபிஷேகமும் அவளுக்குச் செய்தபின், மலயத்வஜன் சிவபதம் அடைந்தான். தந்தைக்குச் செய்யவேண்டிய உத்தரக்ரியைகளை தடாதகையே செய்து முடித்தாள். கன்னிகையாகவே அரசுபுரிந்து வந்ததால் மதுரைக்கு கன்னிநாடு என்ற பெயரும் ஏற்பட்டது.

தன் குழந்தைக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லையேயென்று காஞ்சனமாலை வருத்தப்பட்டாள். தடாதகை தாயாரைத் தேற்றிவிட்டு, திக்விஜயம் செய்துவரப் புறப்பட்டாள். அஷ்டதிக்குப் பாலகர்களையும் வென்ற பிறகு, கைலாஸம் போய் சிவகணங்களுடன் நந்திகேச்வரரையும், தோல்வியுறச் செய்தாள். பகவானே தேவியின் முன் வந்து தோன்றினார். மூன்று முலைகளில் ஒன்று உடனே மறைந்தது. ஜகதாம்பிகை நாணத்தால் தலை குனிந்து நின்றாள். பிராட்டியாரது மந்திரியான சுமதி, "தாயே! இவர்தான் தமது கணவர்" என்றனர்.

விஷ்ணு, ப்ரஹ்மா, இந்த்ரன், தேவர்கள், ரிஷிகள் பலரும் பகவானுடன் மதுரை சேர்ந்தனர். பிராட்டியாரது விவாகம் வெகு கோலாகலத்துடன் நடந்தது. திருமால் தடாதகையின் கைகளைப்பிடித்து, மூவர் முதல்வனும் முக்கண் மூர்த்தியுமான சிவபிரான் கரத்திற் கொடுத்து மந்திரம் சொல்லித் தாரை வார்த்தனர். காமதேனுவைக்கொண்டு அனைவருக்கும் அமுதுண்பித்தனர். ஸோம ஸுந்தர பாண்டியன் என்று பகவானுக்குப் பெயரிட்டு மகுடாபிஷேகம் செய்தனர்.

பகவான் மதுரையில் அரசாண்டு வந்தனர். தமது மாமியாராகிய காஞ்சனமாலை ஸமுத்ர ஸ்நானம் செய்யக்கோரியதால், ஸப்த ஸாகரங்களின் ஜலமும் மதுரையில் உள்ள

ஓர் குளத்தில் வந்து விழும்படி பகவான் அனுக்ரஹித்தார். ஸமுத்ர ஸ்நானம் செய்யும் ஸ்த்ரீகள், தமது புருஷன் அல்லது புத்ரனது கரத்தையோ, கன்றின் வாலையோ பிடித்துக் கொண்டு குளிக்கவேண்டும் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்ட காஞ்சனமாலை வருத்தமடைந்தாள். இதனை யறிந்த பகவான், இந்திரனுடன் வீற்றிருந்த மலயத்வஜ பாண்டியனை ஓர் கொடியில் வருவித்தார். புத்ரியையும் மாப்பிள்ளையையும் கண்டானந்தித்த மலயத்வஜன், காஞ்சனமாலையுடன் ஸமுத்ரஸ்நானம் செய்ததும், விமானமேறி அவ்விருவரும் கைலாஸம் சென்றனர்.

ஸ்ரீசுப்ரமணியர் தடாதகையின் (கர்ப்பத்தில் புகாமலே) குழந்தையாய்ப் பிறந்தார். ப்ரஹ்ம விஷ்ணுக்களும், இந்த்ராதி தேவர்களும், ரிஷிகளும், பூலோக மன்னர்களும் தம் தம் பத்தினிகளோடு வந்து குழந்தையைப் பார்த்து வாழ்த்திச் சென்றனர். இக்குழந்தைக்கு உக்ரவர்மன் என்று நாமகரணம் செய்தனர். கால க்ரமத்தில் ஸகல வித்தைகளிலும் உக்ர குமாரன் பூர்ணமாய்ப் பயின்றனன். சூர்ய வம்சத்தில் தோன்றிய சோமசேகரனது மகள் காந்திமதியை உக்ர குமாரனுக்கு விவாகம் செய்வித்து, உக்ர பாண்டியனென்று புத்ரனுக்குப் பெயரிட்டு முடிசூட்டியபின், தடாதகையும் ஸோமஸுந்தரரும் கோவிலுட் புகுந்து தமது பழய ரூபமாகிய மீனாக்ஷி, சுந்தரேச்வரராய் மாறினர்.

(7)

சூடாலை.

சூராஷ்ட்ர ராஜன் பெற்றெடுத்த சூடாலை எனும் தவப்பெண், மாளவ தேசத்தரசனான சிகித்வஜனை மணந்தாள். இவள் 4 வேதம், 6 சாஸ்த்ரம், 64 கலைஞானம் அனைவற்றிலும் வல்லவள். ஞான யோகத்தால் ஆத்மாவின் இயல்பை அறிந்து ஆனந்திப்பவள். சொந்த முயற்சியில்லாவிடில் ஆத்மஞானம் கிடைப்பது அரிது என்று அறிந்தவள்.

ஸத்குணம் நிறைந்த சிகித்வஜன் காட்டுக்குப்போய் 18 வருஷம் கடுந்தவம் புரிந்தான். அணிமா முதலிய சித்திகள் எட்டையும் அடைந்த சூடாலை, நிர்ம்மல மனதை அடைந்த சிகித்வஜனிடம் அடிக்கடி போய் அவனுக்கு ஞானோபதேசம் செய்தாள். தான் நாரதரது குமாரன் என்றும், 'கும்பமுனி' என்பது தன் பெயர் என்றும் கூறி சிகித்வஜனுக்குக் குருவாய் ஏற்பட்டாள். அவளது உபதேசத்தால், தேஹம் இந்த்ரியங்கள் முதலியவை அழியக் கூடியவை என்றும், ஜீவ ப்ரஹ்ம ஐக்ய ரகசியத்தையும் அறிந்தான் வேந்தன்.—[எல்லாம் நானே எனும் என் புத்தகத்தைப் படித்துப் பார்க்கவும்.]—கும்ப முனியின் க்ருபையால் நிர்விகற்ப சமாதியையும் அடைந்தான் அரசன். சூடாலை அச்சமாதியிலிருக்கும் மன்னனை வெகு சிரமப்பட்டு உலக ஞானத்துக்கு இழுத்தாள். தனது குருவைக்கண்ட மன்னன் சமாதி யனுபவ சுகத்தை யுரைத்து ஆசிரியரைப் போற்றித் துதித்தான். சூடாலை அவனை இன்னும் பரீக்ஷை செய்தாள்.

கும்பமுனியாகிய தான், தூர்வாஸ மஹரிஷியின் சாபத்தால் இரவில் மாத்திரம் பெண்ணாகும்படி நேர்ந்தது என்று தந்திரமாய்க் கூறினாள். இருவரும் ஒருமித்து இருந்தும் அரசன் ஸ்த்ரீ சுகத்தைக் கோரவில்லை. "தினந்தோறும் இரவில் பெண்ணாக மாறுவதால், உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன். ஞானிகளான நமக்கு, நரகம் ஸ்வர்க்கம் இரண்டும் இல்லை" என்று சூடாலை கூறினாள். தேகாதி ஆசைகளை ஒழித்த அரசன், கும்பமுனியை த்ருப்தி செய்ய

18832

நினைத்து, இசைந்தான். மதனிகை என்னும் பெயருடன்; சூடாலை சிகித்வஜனை மறு மணம் செய்து கொண்டு அவனுடன் சுகித்திருந்தாள். அஷ்டமாசித்திகளைக் கற்றவளாதலால் பலவித பரீக்ஷைகளைச் செய்தாள். அரசனுக்குக் கோபம் ஆசை இரண்டும் முற்றிலும் ஒழிந்துவிட்டது என்று அறிந்தாள். கடைசியாக, ஸர்வ தேவர்களுடன் தேவேந்திரனை வந்து, "இந்திரபட்டம் இனி உன்னைச் சேர்ந்தது. ஸ்வர்க்க ஸுகங்களைச் சந்தோஷமாய் அனுபவிக்கப் புறப்படுவா" என்று கூறுவது போல் சிகித்வஜனுக்குத் தோன்றும்படி செய்தாள். அப்போதும் அவ்வரசன், "ஆத்மஞான சுகத்தையடைந்தவனுக்கு அனித்யமான ஸ்வர்க்காதி ஸுகங்களில் அபேக்ஷை எக்காலமும் பிறக்காது. ஆகையால் நீர் போகலாம்" என்று சொல்லி விட்டான்.

பிறகு சூடாலை தன் ஸ்வரூபத்தைக் காட்டி, கும்பமுனியாகவும், மதனிகையாகவும், மாயையினால் இந்திரனாகவும் வந்திருந்தது தானே என்று கூறினாள். ஞான த்ருஷ்டியால் அரசன் பார்த்து, அவளை தனது குருவென்றறிந்து ஆனந்தித்தான். அஞ்ஞானக் கடலிலிருந்து தன்னைக் கரையேற்றிய ஞானியாகிய மனைவியை அன்புடன் அணைந்து அவள் பெருமையை வியந்து கூறினான். ஆசை கோபம் ஆதிகளை முழுதும் துறந்த மன்னன், தனது ஞான குருவும் தேவியுமாகிய சூடாலையுடன் பத்தாயிரம் வருஷம் ஜீவன் முக்தனாய் ராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டிருந்து, பிறகு இருவரும் மோக்ஷம் அடைந்தனர்—[ஞான ஆநந்தம் அடையக்கோருபவர் " இஹ பர சுகம் " என்னும் என் புத்தகத்தைப் படித்துப் பார்க்கவும்.]

---

(8)

சீதை.

விதேஹ தேசத்தரசனான ஜனகர், யாகஞ் செய்யு முன் பொன் கலப்பையால் தாமே நிலத்தை உழுதார். அப்போது நிலத்தினின்றும் கிடைத்த அதியற்புத அழகுள்ள குழந்தையே சீதை. சீதையை வெகு அன்புடன் ஜனகர் வளர்த்தார். சீதையை மணக்கக்கோரிய மன்னர்கள் அனேகர். ஜனகரிடமிருந்த சிவ தனுஸை வளைக்கும் வீரனுக்குத்தான் சீதையை விவாகம் செய்து கொடுப்பதாய் ஜனகர் தீர்மானித்தார். பல வேந்தர்கள் முயன்றும், அவ்வில்லைத் தூக்கவும் அவர்களால் முடியவில்லை.

அயோத்யாபுரியில் அரசாண்டு வரும் தசரதரது மூத்த குமாரன் ராமனையும், அவன் தம்பி லக்ஷ்மணனையும் விச்வாமித்ர மஹர்ஷி மிதிலைக்கு அழைத்து வந்தார். தாடகி, சுபாகு எனும் அரக்கர்களை அழித்து, கல்லாயிருந்த அகலிகையை முன்போல் பெண்ணாக்கிய ராமர், மிகப்பெரிய அவ்வில்லை நடுவில் பிடித்தெடுத்து நாண் பூட்டவே, அவ்வில் இரு துண்டாய் முறிந்தது. உடனே ஜனகர் தசரதரை வருவித்து ஜானகியை ராமருக்கு விவாகம் செய்து கொடுத்தனுப்பினார்.

மந்தரையின் சூழ்ச்சியால் மதியிழந்த கைகேயி தன் குமாரன் பரதனுக்குப் பட்டம் கிடைக்கும் பொருட்டு ராமனை 14 வருஷம் காட்டிலிருக்கும்படி அனுப்பச்செய்தாள். ராமரது பிரிவை ஸஹிக்க முடியாமல் தசரதர் ப்ராணனை விட்டார். பரதர் தம் தாயாராகிய கைகேயியைக் கோபித்துக் காட்டுக்குப்போய் ராமரை வணங்கி அழைத்தார். தசரதரது வாக்கு

பொய்க்காமலிருப்பதற்காக ராமர், வனவாஸம் முடித்துத் தான் வருவேன் என்றார்.

ராமர், லக்ஷ்மணர் சீதை மூவரும் பஞ்சவடியில் பர்ணசாலை அமைத்து வசிக்கையில், அவ்விடம் (ராவணன் தங்கையாகிய) சூர்ப்பனகை வந்தாள். ராம லக்ஷ்மணர்மீது காதல் கொண்டதால் சீதையை அவள் விழுங்கிவிட முயன்றாள். அவளது மூக்கையும் காதுகளையும் லக்ஷ்மணர் அறுத்து அனுப்பி விட்டார்.

லங்காதிபதியாகிய ராவணன் மிகவும் பலசாலி. ப்ரஹ்மாவினிட மிருந்தும், பரமசிவனிடமிருந்தும் அநேக வரங்களைப்பெற்றவன். பத்துத்தலைகள் உள்ளவன். சூர்ப்பனகையின் மொழிகளால் சீதையின் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டு மாரீசனுடன் பஞ்சவடிக்கு வந்தான். பொன் மா(ன் வேஷம் போட்ட மாரீச)னைப்பிடித்துக் கொடுக்கும்படி சீதை ராமரை வேண்டினாள். ராமர் அதனைத்துரத்திப்போய்க் கொல்லுகையில், "ஓ லக்ஷ்மணா" என்று கதறி அம்மான் உயிர் விட்டதால், லக்ஷ்மணரை சீதை ராமரிடம் அனுப்பிவிட்டாள். அச்சமயத்தில் ராவணன் சீதையைத் தூக்கித்தன் புஷ்பக விமானத்தில் வைத்துக்கொண்டு லங்கைக்குப்போய்விட்டான். தன்னை எதிர்த்த ஜடாயு பக்ஷியைக் குற்றுயிராக்கி விட்டுப்போனான்.

ராம லக்ஷ்மணர் சீதையைக் காணாமல் பரதவித்தனர். குரங்கரசனாகிய வாலியை ராமர் கொன்று, அவன் தம்பி சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்த பிறகு, வானர வீரர்களை(ச் சீதையைத்தேடிவரும் பொருட்டு) நான்கு திக்குகளிலும் சுக்ரீவன் அனுப்பினான். லங்கையில் அசோகவனத்தில் தன்னை வருத்தியும் பயமுறுத்தியும் வரும் ராக்ஷஸிகள் மத்தியில் சீதை உட்கார்ந்து துயர்க்கடலில் மூழ்கியிருப்ப

தை வாயுகுமாரனான ஹனுமார் பார்த்தார். ராவணன் அங்கு வந்து சீதையைக் கெஞ்சினான். மிரட்டினான். தன்னை 2 மாதத்துக்குள் கல்யாணம்செய்து கொள்ளாவிட்டால் கொன்று விடுவதாகக் கூறினான். ராவணன் சென்றதும் மகா லக்ஷ்மியாகிய சீதா தேவி ப்ராணனை விடத்துணிந்தாள். ஆனால் விபீஷணனது மகள் த்ரிஜடை, சீதைக்குத் தைர்யம் சொல்லி வந்தாள். ஹனுமார் ராமரது சரித்ரத்தைக்கூறி, அவரது மோதிரத்தையும் அடையாளமாகக்கொடுத்தார். அம்மோதிரத்தைப் பெற்ற சீதா பிராட்டியார் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். ராமரையே அடைந்து விட்டதுபோல் களித்து அதனை அணைந்தாள். சீக்கிரம் வந்து தன்னை மீட்டுப்போகும்படி ராமருக்குச் சொல்லியனுப்பி, தன் சூடாமணியையும் அடையாளமாக ஹனுமாரிடம் கொடுத்தாள்.

அஞ்ஜனாதேவியின் குமாரராகிய ஹனுமார் அசோகவனத்தையும் அநேக ராக்ஷஸர்களையும் அழித்தபின், ராவணனிடம் போய் புத்திமதி கூறினார். அவர் வாலில் துணிகளைச் சுற்றி ராக்ஷஸர்கள் தீ மூட்டினர். ஆஞ்ஜனேயர் அந்நெருப்பால் லங்கையில் உள்ள மாளிகைகள் வீடுகள் முதலியவைகளைக் கொளுத்திவிட்டு, சீதாதேவியிடம் உத்தரவு பெற்று, கடலை மறுபடியும் தாண்டினார். வானர வீரருடன் ராமரிடம் போய், "கண்டேன்" சீதையை என்று கூறி, சூடாமணியைக் கொடுத்தார். ராமர் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தார். ஹனுமாரை மார்போடு அணைத்துக்கொண்டார்.

வானர ஸைன்யத்தோடு ராம லக்ஷ்மணர் லங்கைக்குச் சென்று, ராவணன் கும்பகர்ணன் இந்திரஜித்தன் முதலிய கொடிய ராக்ஷஸ வீரர்களைக் கொன்றொழித்தனர். (ராவணன் தம்பியானாலும்) மகா சாதுவான விபீஷணருக்குப் பட்டங் கட்டியபின், சீதையை அக்னியில் மூழ்கும்படி

ராமர் கட்டளையிட்டார். 'அவ்வாறே சீதை செய்தாள். அக்னி பகவான் ரூபமெடுத்து வந்து, "சீதையின் பதிவ்ரதாக்னியானது என்னையே சுட்டெரிக்கின்றது 10 மாதம் லங்கையில் இருந்தாளென்று அவளை ஸந்தேஹிப்பது சரியல்ல" என்று ராமரிடம் கூறிப்போயினர்

விபீஷண, சுக்ரீவ, ஹனுமார் ஆதி மித்ரருடன் ராமர் அயோத்திக்குச்சென்று, பரதனும் மற்றவர்களும் மனமகிழுமாறு பட்டாபிஷேகம் செய்து கொண்டார். "பத்து மாதம் லங்கையிலிருந்த சீதையை ராமர் தம்மிடம் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்," என்று யாரோ சொல்லிவிட்டதால் மறுபடியும் சீதையை வனத்துக்கனுப்பிவிட்டார். தன் விதியை நினைத்து அழுது கொண்டிருக்க சீதையை வால்மீகரிஷி அழைத்துப்போய் தமது ஆச்ரமத்தில் ஆதரித்து வந்தார். சீதை வனத்துக்கு வருமுன் கர்ப்பமாயிருந்தாள். அவ்வாச்ரமத்தில் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். குசன், லவன் என்று அவர்களுக்கு வால்மீகர் நாமகரணம் செய்தார்.

ராவணனைக் கொன்றபின் ஆயிரம் வருஷம் தான் சீதை ராமருடன் இருந்தாள். பிறகு வனத்துக்கு அனுப்பப்பட்டாள். குசலவர்களுக்கு 12 வருஷம் ஆனதும், அயோத்தியில் ராமர் செய்யும் அச்வமேத யாகத்துக்கு வால்மீகர் சென்றபோது லவகுசர்களும் போனார்கள். ப்ரஹ்மாவின் கட்டளைப்படி வால்மீகர் இயற்றிய ராமாயண ச்லோகங்கள் 24;000 த்தையும் அப்பாலர் இருவரும் பாடுகையில் அனைவரும் ஆனந்த முற்றனர். அவர்கள் தமது குமாரர்களே என்றறிந்ததும் ராமர் ஆநந்தக் கண்ணீர் சொரிந்து குசலவர்களை மார்போடு தழுவிக் கொண்டார். சீதை பரிசுத்தமானவளே என்பதை மறுபடியும் ரூபித்தால், அவளைச்

சேர்த்துக் கொள்வதாய் ராமர் கூறினர். அச்வமேத மண்டபத்தில் வால்மீகருடன் வந்த ஜானகி, பூமி தேவியை நினைத்து, "ஓ தாயே! நான் மனத்தால் கூட வேறு எண்ணமில்லாத உத்தம பதிவ்ரதை என்பது உண்மையானால் என்னை உடனே அழைத்துக்கொள்" என்றாள். ஸபையில் கூடியிருந்த தேவர்கள் ரிஷிகள் ஆதியோர் யாவரும் பார்த்திருக்கையிலேயே, பூமி படீரென்று வெடித்தது. உள்ளே ஓர் விமானம் தோன்றிற்று. அதில் சீதையை உட்கார வைத்துப் பூமிதேவி மறைந்ததும், திறந்த பூமி முன்போல் மூடிக் கொண்டது.

ராமர் துக்கக்கடலில் ஆழ்ந்தார். அப்புறம் 9;000 வருஷம் ஆண்ட தாசரதி வேறு ஸ்த்ரீயைக் கனவிலும் நினைக்கவில்லை. பொறுக்க முடியாத துயரங்களை ஸஹித்து, கணவனே தெய்வம் என்று நினைத்திருந்த சீதைக்குச் சமானமாக யாரைத்தான் சொல்லமுடியும்!—[சீதை ருக்மணி இவர்களைப் பற்றி விஸ்தாரமாய் அறிய வேண்டுவோர் எனது "தசாவதார வசனம்" படித்துப் பார்க்கவும்.]

[மஹாபாரத வசனம். (முதற்பாதி)]

பைந்தமிழ்:—இனிய எளிய நடையில் எழுதப்பெற்ற நூல் ...இத்தகைய நூல்களே பள்ளிக்கூடங்களில் கட்டாயம் பாடப் புத்தகங்களாக வைக்கப்படவேண்டும்.

தமான்:—பள்ளிக்கூடங்களில் உபயோகிப்பதற்கு மிக உபயோகமாயிருக்கும்.

ஜனரஞ்ஜனி:—நடை தெளிவாகவும் பேர்கள் ஸுலபத்தில் விளங்கக் கூடியதாகவும் இருப்பதால் இது பாடசாலை மாணவர்களுக்குப் பாடமாக உபயோகமாகும்.

[Featherweight பேபரில் அச்சிடப்பெற்றது. விலை 1 ரூபாய் முதல் 9 பர்வம் அடங்கியது.]

[எல்லாம் நானே—விலை 2 அணா]

தேசோபகாரி (ரங்கூன்):—அத்வைதிகளின் கொள்கைப் பயன்களை பல உதாரணங்களால் விளக்கி ஏகாத்ம நிலையையும் ஜீவ ப்ரஹ்ம ஐக்யத்தையும் நன்கு புலப்படுத்துகின்றது.

தெய்வ பக்தன்:—பல உவமானங்களுடன் விளக்கியுள்ள ....புத்தகம்.

[இஹபரஸாதகம்—விலை 8 அணா]

ஸமரஸ போதினி:—ஸ்ரீமான் கா. சு. சேஷகிரி ஐயர் அவர்களால் எழுதப்பட்ட இப் புத்தகத்தில் 50 மஹாத்மாக்களின் ஞான மொழிகள், இகபர சுக ஸாதனங்களான உண்மைப் போதனைகள், வாழ்க்கை நிலையின் அரிய பல தத்துவங்கள் அழகாய் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியில் முத்துக் கோர்த்ததுபோல் அச்சிடப்பட்டுள்ளது. இதில் கண்டுள்ள ஒவ்வொரு வாக்யமும் பொன்னேபோல் போற்றத்தக்கன. வேதாந்த விஷயங்கள் மிகவும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இது எம் மதஸ்தருக்கும் எவ் வகுப்பாருக்கும் மிகுந்த நற்பயனை அளிக்கக் கூடியது என்பதில் தடையில்லை. இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டியது மிகவும் அவசியமேயாகும்.

தெய்வ பக்தன்:—மக்களது உயிருக்கு உறுதி பயக்கக் கூடிய......நல்ல உபதேச மொழிகளாக......தொகுக்கப்பட்டது.

[மஹா பாரத வசனம் (முதற்பாதி)—விலை 1 ரூபாய்]

தேசோபகாரி (ரங்கூன்):—சுருக்கமாகவும் விளக்கமாகவும் பண்டித பாமர ரஞ்ஜிதமாகவும் வரையப்பெற்றது. ("இஹபரசுகம்", "எல்லாம் நானே", "பாரத முதற் பாதி" ஆகிய) இம் மூன்று நூல்களும் தமிழ் மக்களுக்குப் பெரிதும் பயன்படுமாறு செந்தமிழ்ச் செம்பான நடையில் செவ்விதின் அமைந்துள்ளன. இவற்றைக் கற்பவர் அறம் பொருள் இன்பம் வீட்டை மெய்ம்மையில் அடைந்துய்வர் என்பது உண்மை.

தெய்வபக்தன்:—மாணவப் பருவத்துச் சிறுவர் சிறுமிகள் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியது.

ஸமரஸ போதினி (தஞ்சாவூர்):—"இஹபரஸாதகம்" என்ற அரிய புத்தகத்தின் ஆசிரியரான ஸ்ரீமான் கா. சு. சேஷகிரி ஐயர் அவர்களே இப் புத்தகத்திற்கும் ஆசிரியராவர். நமது புராணக் கதைகள் தேய்பிறைபோல் மறைந்து வரும் இக்காலத்தில், மீண்டும் அவைகளின் தத்துவம் நமது சிறுவர் சிறுமிகள் மனதில் ஆழப் படியும்படிக்கு நல்ல சமயத்தில் இவ் வரிய புத்தகத்தை வெளியிட்ட ஆசிரியருக்கு நமது சந்தோஷத்தைத் தெரிவிக்கிறோம். மிகவும் எளிய தமிழ் நடையில்....உள்ள இப்புத்தகத்தைத் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பாடப்புத்தகமாக வைத்தல் மிகுந்த பலனை யளிக்கும் என்பது நமது அபிப்பிராயம்.

தமிழகம் (கோலாலம்பூர்):—இராமாயணத்தைக் கம்பரும் பாரதத்தை வில்லிபுத்தூராரும் அருளிச் செய்திருக்கிறார்கள். இவை கற்றுவல்ல பண்டிதர்க்கேயன்றி ஏனையோர்க்கு ஒரு சிறிதும் பயன் படாவாம். இவ் விரண்டு நூல்களும் வசன நடையில் விரிவாகச் சிற்சிலரால் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆயினும் விரிந்து செல்லுதலால் பொது ஜனங்கள் அவற்றை விரும்பிக் கற்பதில்லை.

ஸ்ரீமத் கா. சு. சேஷகிரி ஐயரவர்களின் மகாபாரத வசனம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இனிய எளிய தமிழ் நடையில் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வரிய நூல் தமிழ்மக்கள் எல்லார்க்கும் பெரிதும் பயன்படும் என்பது இதனை வாங்கிப் படிப்பவர்க்குச் சொல்லாமலே விளங்கும்.

மயிலாப்பூரில் கிழக்கு மாடவீதியில் உள்ள நாஷனல் கேர்ல்ஸ் ஸ்கூல் மேசரான ஸ்ரீமதி P. மங்களாபாய் அம்மாளின் வேண்டுகோள்:—

ஐயா,

நான் தமிழில் எழுதி வெளியிட்டதும், துரைத்தனத்தா (Text-book Committee யா) ரால் முன்னமே அங்கீகரிக்கப்பெற்றதும், ஏழு காண்டங்களும் அடங்கியதுமான எனது பால ராமாயணகதையைத் தங்களுடைய பள்ளிக்கூடத்திலோ அல்லது தாங்கள் சிபார்சு செய்யக் கூடிய இதர கல்விக்கழகங்

களிலோ, தக்க வகுப்புக்குப் பாடப்புத்தகமாய் வைப்பிக்கக் கோருகிறேன்.

நல்ல கடிதத்தில் அச்சிட்டிருக்கும் இப்புத்தகத்தின் விலை 6 அணாதான் இப்புத்தகக்கடைசியில், ராவணன் போன்ற துஷ்டர்களின் த்ருஷ்டாந்தத்தால் நாம் அறிந்து நீக்க வேண்டிய கெட்ட எண்ணங்கள் துர்நடத்தைகளையும், ராமர் லக்ஷ்மணர் சீதை ஹனுமார் முதலிய மஹாத்மாக்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய நற்குண நல்லொழுக்கங்களையும் எடுத்துரைத்திருக்கிறேன். சிறுவர்களுக்கு மிகவும் அவசியமான இப்புத்தகம் சுலபமான தமிழில் எழுதப்பட்டிருப்பதைக்காண்போர் கல்விச்சாலைகளில் இதனைப் பாடப்புத்தகமாய் வைப்பித்து ஆதரிப்பர் என்று நம்புகிறேன்.

P. மங்களாபாய்.

[SRI RAMANA GITA—Price 1 Rupee]

The "*Hindu*":—This book consists of 18 chapters in Gita fashion. The original (Sanskrit) verses are printed in bold Devanagari characters. Each verse is translated in simple and clear Tamil. The secrets of Mantra yoga, Raja yoga, Gnana yoga and Karma yoga are all clearly explained in this book. Bhagavan *Sri Ramana Maharishigal* of Tiruvannamalai, of whom almost every one has heard, was the inspirer of the sacred contents of this invaluable book which is indispensable for all aspirants after spiritual progress.

Copies can be had of *Sri Ramaneeya Vani Pusthakalayam, Tiruvannamalai* (N Arcot. Dt).

Adi Sankaracharya's *Viveka choodamani* in Tamil Prose (Price 6 As.) can also be had there.

The "MAHABHARATHA" in English

(Complete in 2 Parts) (Part I costs 10 as only.)

Dear Sirs,

I have written and published in simple English the first ten Parvams of the Mahabbaratha as 'Part I' The second part which contains the last 8 parvams will be published later.

You will find elsewhere the names of five other books of mine that are now ready for sale, These books have won excellent opinions from the Press as well as from some highly cultured gentlemen.

May I request you to be kind enough to get these books prescribed as text-books for some class or Form in your or other schools to which you can recommend it! I think I need not dilate on the desirability and advantages of encouraging the use of books written by swadesis.

No. 15 Chitrakulam
Eastward Street,
Mylapore, Madras.

K. S. Seshagiri Iyer,
Teacher, P. S. High School, Mylapore.

மதராஸ் லா ஜர்னல் ப்ரெஸ், மயிலாப்பூர்.

ஆசிரியர் கா. சு. சேஷகிரி ஐயரது புத்தகங்களில் அச்சிடத் தயாராயிருப்பவை.

---

(1) **Inspiring Thoughts** gathered from sixty Representative Mahatmas, Saints and Sages of all times and climes and classified under 20 headings. It includes among others Sri Krishna, Lord Buddha, Sankara, Ramanuja, Muhammad, Madhwa, Nanak, Jesus Christ, Zoraster, Chaitanya, Thayumanavar, Rama Krishna, Vivekananda, Rama Tirtha and Sri Ramana Maharishigal of Tiruvannamalai. It will cost about a rupee when printed.

"Whoever loves to perceive the **Unity in Diversity**, the one true Soul underlying all appearances of fleeting and perishable objects in life, will surely find this book **a treasure-house of priceless value.**"
Sadananda Swamigal.

(2) **Sacred Thoughts** might cost about As 8 when its second edition could be printed. It is classified in 12 chapters.

(3) *English Book for Tamil Youths*:—ப்ரஹ்ம ஸ்ரீ பண்டார்க்கர் அவர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையை இங்லீஷின் மூலமாய் சுலபத்தில் அறிவித்ததுபோல், இங்க்லீஷ் பாஷையை தமிழ் மூலமாய் எளிதில் ஸ்கூல் பிள்ளைகளும் இதரரும் அறியும் பொருட்டு எழுதப்பட்ட இப்புத்தகத்தை முதல் பாரத்திலிருந்து மெட்ரிகுலேஷன் வகுப்புவரையில் வேண்டியவர்கள் உபயோகிக்கலாம். இங்க்லீஷ் இலக்கணவிதிகள் விஷயங்களைத் தமிழ்ப் பாஷையிலேயே படித்துக் கற்றுக்கொள்ள இப்புத்தகம் அனுகூலிக்கும். இதன் (விலை எட்டணா ஆகும்.)

(4) *English Pronunciation Made Easy*:—இந்த இங்க்லீஷ் புத்தகத்தில் காணும் 500 க்கு மேற்பட்ட தமிழ், தெலுங்கு தலைப்பு (Headings) களின் கீழ் (Alphabetical arrangement) இலேயே உள்ள 4,000 இங்க்லீஷ் பதங்களை உச்சரிக்கக் கற்பது குழந்தைகளுக்கு வெகு சுலபமாயிருக்கும். உபாத்தியாயர்களின் கஷ்டங்களில் வெகு கடினமான ஒன்றை நீக்கும்.

Put, but; danger, anger; to, go; water, later; cow, low; seven, even; limb, climb; daughter, laughter; now, snow; neat sweat; cost, host; come, dome; முதலிய (pairs of words)

ஜதைப் பதங்களில் எழுத்துக்கள் அனேகமாய் ஒன்றாயிருந்தும் கூட உச்சரிப்பில் (Pronunciation) பேதப்பட்டுக் குழந்தைகளுக்கு அதிக தொந்தரவு உண்டாக்குவதை அறிபவர் இப்புத்தகத்தின் அருமையை அறிந்து, முதல் க்ளாஸிலிருந்து மூன்றாவது பாரம் (III Form) வரையில் கட்டாயமாய் இதனை உபயோகிப்பார். (விலை எட்டணா ஆகும்.)

(5) ஆநந்த விஜயாங்கர் :—ஷேக்ஸ்பியர் மஹாகவி ஆங்கிலத்தில் எழுதிய 'Comedy of Errors'ன் தமிழ் மொழிபெயர்ப்பு. இந்த ட்ராமாவில் வரும் கதா நாயக நாயகிகள், அவர்கள் இருந்த இடங்கள் முதலியவற்றை நமது இந்தியா தேசத்திற்கு ஏற்றபடி மாற்றி எழுதியிருக்கிறேன். படிப்பவர்களுக்கு வயிறெல்லாம் புண்ணாகும்படியான சிரிப்பை உண்டாக்கக் கூடிய நாடகம். இதை அச்சிட்டால் விலை 1 ரூபாய்க் குள்ளாகும்.

(6) தசாவதார வசனம் :—ஸ்ரீ மகாவிஷ்ணுவின் 10 அவதாரங்கள். சுலபமான நடையில் எழுதியது. (விலை 8 அணா.)

(7) மகாபாரதம் (இரண்டாம் பாதி) கடைசி 9 பர்வங்கள் உள்ளது.

(8) த்வாதசாயுதமுலு (தெலுங்கில்) 'Dozen Weapons''ன் தெலுங்கு மொழி பெயர்ப்பு.

(9) த்வாத சாயுதம் :—"Dozen Weapons''ன் தமிழ்ப்பெயர்ப்பு.

(10) ஈச்வர லீலை :—சிவபிரானது 64 திருவிளையாடற் சுருக்கம். சுலபமான தமிழ் நடையில் உள்ளது. (விலை 8 அணா). 1924 மார்ச் மாதம் வெளிவரும்

மயிலாப்பூரில் சித்திரக்குளம் கீழண்டை வீதி 15-ம் நம்பர் வீட்டிலிருக்கும் ஆசிரியர் கா. சு. சேஷகிரி ஐயரது புஸ்தகங்கள் சிலவற்றைப் பற்றிய அபிப்ராயச் சுருக்கங்கள்:—

(1)

[மஹாபாரத வசனம் (முதற்பாதி) விலை 1 ரூபா.

பைந்தமிழ்:—மகாபாரதத்தின் 18 பர்வங்களில் முதல் 9 பர்வங்களைத் தமிழில் சுருக்கி இனிய எளிய வசன நடையில் பெண்டிர்களும் பள்ளிக்கூட மாணாக்கர்களும் அறியுமாறு எழுதப்பட்ட நூல். இத்தகைய நூல்களே பள்ளிக்கூடங்களில் கட்டாயம் பாடப் புத்தகங்களாக வைக்கப்படவேண்டும்.

தமிழகம் (கோலாலம்பூர்):—ஸ்ரீமத் கா. சு. சேஷகிரி ஐயரவர்களின் மகாபாரதவசனம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இனிய எளிய தமிழ்நடையில் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வரிய நூல் தமிழ்மக்கள் எல்லாருக்கும் பெரிதும் பயன்படும் என்பது இதனை வாங்கிப் படிப்பவர்க்குச் சொல்லாமலே விளங்கும். ஐயரவர்கள் இவ்வசன நூலை, மிக இளமையிலேயே வாலறிவு பெற்று விளங்கி இறைவன் திருவடி நீழல் எய்திய அவர் அருமைப்புதல்வி ஸ்ரீ K. S. சாரதாம்பாளை நினைவுகூறுதற் பொருட்டு வெளியிட்டிருக்கின்றனர். இப்பெண்மணியின் அபூர்வ அறிவைப் பற்றிக் கேட்ட யாம் மிகவும் வியப்புற்று, பத்து வயதில் அவள் விண்ணுல கடைந்ததைப் பார்க்கப் பெருகிய துன்பமடைந்தோம்.

சுதேசபரிபாலினி (ரங்கூன்):— ஸ்ரீமான் கா. சு. சேஷகிரி ஐயர் மகாபாரதத்தில் சல்லியபருவம் முடியவுள்ள கதையை ஸங்க்ரஹமாக எழுதி முதற்பாகமாக வெளியிட்டுள்ளார். சொல் நடை, வில்லி பாரதச் செய்யுளின் வர்ணனை நடைபோல, படிப்பவர் மனதில் விஷயங்களை எதிரில் தோற்றுவிக்கிறது. ஸத்காலக்ஷேபத்துக் கேற்ற நூல் இது. உபாக்யானங்கள் எல்லாம் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

ஸ்ரீ ராமக்ருஷ்ண விஜயம்:—நல்ல கடிதத்தில், எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. சென்னையில் சில பள்ளிக்கூடங்களில் இப்புத்தகத்தைப் பாடமாக வைத்திருப்பதால், பாடசாலைகளுக்கு மிகவும் உபயோகமாக விருக்கும்.

சுதேசமித்ரன்:—தமிழ் நடை சிறந்ததாக விருக்கிறது.

குமரன்:—பிழையின்றி நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. கண்டபடியாக எழுதப்படும் நாவல்களை வாங்கிப் படிக்கும் நமது நாட்டுச் சிறுவர்களும் பெண்மக்கள்களும் இதனை வாங்கிப்படித்தல் நலமாகும். பள்ளிக்கூடங்களில் உபயோகிப்பதற்கு இப்புத்தகம் மிக உபயோகமாயிருக்கும்.

ஜனரஞ்ஜனி:—இதன் நடை தெளிவாகவும், பொருள் ஸுலபத்தில் விளங்கக் கூடியதாகவும் இருப்பதால் இது பாடசாலையில் மாணவர்களுக்குப் பாடமாக உபயோகமாகும்.

நவசக்தி:—மகாபாரதக் கதையைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துச்சொல்லிக் கொண்டு போகிறார் இதன் ஆசிரியர். இது பள்ளிக்கூட மாணவர்களுக்கு உபயோகப்படக் கூடியதே.

(2)

[எல்லாம் நானே (விலை 2 அணா)]

சுதேச பரிபாலினி (ரங்கூன்):—ப்ராந்தி மதத்தை ஒழிக்கவும், ஞானவாளைப்பெறவும், ஸோஹம்பாவனை செய்து அஹம் ப்ரஹ்மாஸ்மி என்பதை அனுபவ பூர்வமாயுணரவும் வேண்டிய பலத்தை ஆதார நியாயங்களோடு உணர்த்தும் சிறு நூல். வேதாந்திகளது பரிபாஷைகள் முழுவதையும் ஓரிடத்தில் சில நிமிஷங்களுக்குள் அறிய விரும்புவோரும், ஏற்கனவே அறிந்து சிரவணாதிகள் புரிய விரும்புவோரும் இந்நூலைத் தங்கள் ஹ்ருதய மடியில் உள்ள சட்ட சபையில் எப்பொழுதும் போட்டு வைத்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

தமிழகம் (கோலாலம்பூர்):—இது 40 பக்கம் கொண்ட சிறு புத்தகம். 'எல்லாம் நானே' என்ற பெரிய வேதாந்த உண்மையைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உணர்ந்துகொள்ள வேண்டுவோர் ஒவ்வொருவரிடத்திலும் இப்புத்தகம் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம்.

நியூ இண்டியா:—ஜீவ ப்ரஹ்ம ஐக்ய உண்மையை எண்ணிறந்த உபமானங்கள் மூலமாய்த் தமது ஸ்வய யுக்தியால் நன்கு விளக்கிய இவ்வாசிரியரது திறமையை மதபேதம் பாராட்டும் எவரும் அறியாதிருக்க வியலாது.

(3)

[மகாபாரதம் (முதல் 10 பர்வங்கள்) — (இங்லீஷில்)]

சுலபமான இங்லீஷில் கா. சு. சேஷகிரி ஐயர் நன்றாக எழுதியுள்ள இப்புத்தகம் ஆங்கிலம் பயிலும் சிறுவர் சிறுமிகளுக்கும் வெளி தேசத்தவருக்கும் மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும்.

[சதானந்த சுவாமிகள்]

(4)

[ஸீக்ரெட் தாட்ஸ்—இங்லீஷில்]

இண்டியன் ரெவ்யூ:—ஸர்வ தேச ஸர்வ காலங்களிலும் ப்ரசித்தி பெற்றிருந்த ப்ரபல புருஷர்களின் மஹாவாக்குகளில் பொறுக்கித் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

ப்ரஹ்ம ஸ்ரீ எஸ். கே. யக்ஞ நாராயணையர் அவர்கள், எம். ஏ.:— ஸீக்ரெட் தாட்ஸ்' என்னும் பெயர் புனைந்த புத்தகத்தில் நிறைந்துள்ள ரமணீயமான மஹாத்ம வசனங்களைப் படிப்போர் ப்ரஹ்மானந்த மடைவர்.

(5)

[டஸன் வெபன்ஸ்—(இங்லீஷில்) விலை 8 அணா.]

நியூ இண்டியா:—ஸர்வ பந்தங்களையும் கடந்து நாளாவட்டத்தில் பரம் பொருளுடன் ஒன்றாகி நிற்கக்கோரும் லக்ஷக்கணக்கான ஜீவர்களைக் கரையேற்றுவதற்காகவே எழுதப்பட்ட இப்புத்தகத்தை, தேசாபிமானம் ஒரணுவளவாயினும் தம் ஹ்ருதயத்தில் உள்ள இந்தியர் எவரும் கைவிடார். படிக்கத் தவறுவோர் மனதார வருந்துவர். இப்புத்தகத்தை ஸதாபடித்து வருபவர் காலக்கிரமத்தில் மானிடதோஷங்கள் ஸர்வத்தையு மிழந்து, தீமையால் துன்பமடையாததும் களைத்தவருக்குச் சாந்தி யளிப்பது மான திவ்ய லோகத்தை அடைவது சுலப சாத்யம்.

(6)

[இன்ஸ்பயரிங் தாட்ஸ்—(இங்லீஷில்.)]

மின்னல் போல் தோன்றி மறையும் அநித்யப் பொருட்கள் ஸர்வத்தின் உள்ளும புறமுமாய் நிறைந்த அத்விதீய வஸ்துவை அறிய விரும்பும் அன்பர்கள், இவ் இங்லீஷ் புத்தகத்தை அளவிடற் கரிய ஓர் மாணிக்க மலையாகக் கொள்வர் என்பது நிச்சயம்.

[சதானந்த சுவாமிகள்.]

(7)

[இஹபர ஸாதகம். (விலை அணா 8)]

தமிழகம் (கோலாலம்பூர்):—மக்களுக்கு மிகவும் பயன்படும் அரிய நீதிகள் இந்நூலிற் கூறப்பட்டிருக்கின்றன. இதில் உள்ள ஒவ்வொரு வாக்யமும பொன்னேபோல போற்றற் பாலதென்று கூறுவது மிகையாகாது. இத்தகைய சிறந்த நூல்கள் நமக்கு இன்றியமையாதன.

ஸ்ரீராம க்ருஷ்ண விஜயம்:—இவ்வுபதேசங்களை வாசிப்பதோடு நில்லாது வாழ்க்கையிலும் கைக்கொள்பவர்கள், இகத்திலும் பரத்திலும் சுகம் பெறுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. தமிழ் மொழியில் இம்மாதிரி தொகுக்கப்பட்ட நூல் இது ஒன்றே யாகும். புத்தகம் நல்ல கடிதத்தில் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கின்றது.

கிராம பரிபாலனம் :—இந்நூலில் பல அரிய ஞான மொழிகள் காணப்படுகின்றன. கண்ணனும், புத்தரும், கிறிஸ்துவும், மூசம்மதும், திருவள்ளுவரும், ராமானுஜரும், சங்கரரும், சைதன்யரும், தாயுமானவரும், பர்த்ருஹரியும், பட்டினத்தடிகளும், ராமக்ருஷ்ண விவேகானந்தர்களும், கன்ப்யூஸியஸ் என்ற சீன முனிவரும், உலகமெல்லாம் தொழுதேத்தும் பிற மஹாத்மாக்களும் கருத்து ஒருமித்து ஒரே இடத்தில் ஒரே காலத்தில் கூடி உரையாடுகின்றனர். இன்னும் செந்தமிழ்ப் பெரியோர்களான அப்பரும், சுந்தரரும், சம்பந்தரும், சடகோபரும், மாணிக்கவாசகரும், நந்தனரும், இராமலிங்கரும், அருளிய உண்மைகளும் இந்நூல் வாயிலாகப் பலருக்கும் விளங்கக் கூடும் என்று நம்புகிறோம்: இதனால் எல்லா மதங்களிலும் இலை மறைகாய் போல மறைந்து கிடக்கும் உட்பொருளும் பொது உண்மைகளும் பலருக்கும் இனிது விளங்கி மனித குலத்தைப் பாழாக்கும் ஒற்றுமையின்மையை ஒருவாறு குறைக்கவுங் கூடும்.

சுதேசபரிபாலினி (ரங்கூன்) :—இகபரசுகத்தில் மேலை நாட்டவர் கீழை நாட்டவர் என்ற பேதம் பாராட்டாமல் 50 மகாத்மாக்களின் ஞான மொழிகளை "அஹிம்ஸா" முதல் "முக்தி நிலை" யீறாகப் பன்னிரண்டு தலைப்பின் கீழ், 227 ஆன்மார்த்த வசனங்களாய்ப் போதித்துள்ளார். அதனோடு சேர்த்துள்ள ஸ்ரீ ரமண மாலை வெகு அழகிய சந்தத்தில் சொற்சுவை பொருள் நயங்களோடு அமைந்துள்ளது.

நவசக்தி :—இதில் எடுத்தாளப்பட்டிருக்கும் உரைகள் போற்றத் தக்கன.

ஜனாஞ்ஜனி :—உலகத்தில் சிறந்து விளங்கிய 50 மகாத்மாக்களின் அருள் மொழிகளிலிருந்து தெரிந்தெடுத்த உயர்ந்த கருத்துகள் அடங்கிய வாக்யங்களை தானம், வைராக்யம், ஆத்மா, பகவத்பக்தி கடவுள், ஞானம், முக்திநிலை முதலிய 12 பிரிவுகளில் அடக்கி, இப்புத்தகம் அமைந்துள்ளது. இந்த நூல் நீதியையும் ஸன்மார்க்கத்தையும் தெரிவிக்கும் நல்ல புஸ்தகமானதால் இதை எல்லாரும் வாசித்துப் பயனடைய வேண்டும் என்பது நமது கோரிக்கை.

பைந்தமிழ் :—ஆதிகால முதற்கொண்டு நாளது வரையுள்ள மஹான்கள் மதாச்சார்யர்கள், தத்வ சாஸ்த்ரிகள், கவிவாணர்கள், ஞானிகள் முதலிய பெரியோர்களது மொழிகளைக் கோர்வையாக ஒவ்வொரு தலைப்பின் கீழ் சேர்த்து அமைக்கப்பட்டது. இவ்வாக்யங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மதத்தனும் படித்து மனனம் செய்யத் தகுதியுடையன. கல்வி பயிலும் மாணாக்கர் நல்லொழுக்கத்தில் விருத்தியடைவது கல்வியின் பயன் எனக் கருதுபவர் இப்புத்தகத்தையே கற்பிக்க ஏற்பாடு செய்வாராக.

"ஸ்வதேச மித்ரன்" :—ஆங்கில பாஷையில் கா. சு. சேஷகிரி ஐயர் எழுதியவைகளே தமிழில் ஞான மொழிகளாக மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வாக்யமும் ஒவ்வொரு ரத்னம் போன்றிருக்கிறது. வேதாந்தசாரமான விஷயங்கள் மிகவும் நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. இதனைப் படித்து மனனம் செய்வது விரும்பத்தக்கது. தமிழ் மக்களுக்கு இது ஒரு நல்விருந்தாகும்.

"தேசபக்தன்":—இதை யாவரும் படித்தல் அவசியம்.

"ஜனோபகாரி":—இதில்...ஒவ்வொரு நீதியும் ஒரு ஆழ்ந்த கருத்தை வெளியிடுகிறது. இது யாவரும் வாசித்துப் பயன் படக் கூடிய ஆத்மவிசார ஸம்பந்தமான நீதிக்கோர்த்து என்று சொல்லலாம்.

"ப்ரபஞ்சமித்ரன்"—:உயர்ந்த கருத்துகள்...ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டியது அவசியம்.

"ஆனந்தபோதினி" :—இந்நூல் முழுமையும் இருமைக்கும் அவசியமான அரிய வாக்யங்களும் ஆன்றோரின் அருமை மொழிகளும் அடங்கியுள்ளதால் இது யாவர்க்குமே நற்பயனை அளிக்க வல்லது என்பது உண்மையாகும்.

"பூர்ண சந்த்ரோதயம்":—மிகவும் உபயோகமுள்ளது.

"பெண் கல்வி":—மத வித்யாஸமின்றிய நீதி வாக்யங்கள்.

"இண்டியன் பேட்ரியட்":— ஸர்வ மதங்களின் உட்பொருளாய் நின்ற பொது நீதிகள்.

"ஹிந்து":— ஸர்வ ஜீவர்களுக்கும் அத்யாவசியமான பாகங்களைச் சுருங்கச் சொல்லினும் சாரம் நிறைந்து சுலபத்தில் ஞானமூட்டற்குரிய அற்புத வசீகர வாக்குகள்.

மகா-ஈ-ஈ-ஸ்ரீ. B. V. நரசிம்ம ஐயர் அவர்கள்:— இதனைக் காணும் நெறி பற்றி ஒழுகுபவர் இஹத்தில் ஜயமும் பரத்தில் மோக்ஷமும் அடைவர்.

["IHA PARA SUKHAM."—Price 8 As.]

"New India":—"*Iha Para Sukham*" is a Tamil book written and published by Mr. K. S. Seshagiri Iyer, the author of the English book "*Sacred Thoughts*". It sets forth in simple language *the best precepts* and the *noblest thoughts ever given to mankind* by some of the greatest men of all times and climes. Rightly did the "*Swadesa Mitran*" observe the other day that *every sentence* in this book is *a gem*.

The "Hindu":—*Pithy* and *inspiring* sayings...bearing on *the fundamentals of life* and good existence, etc. etc.

"The Indian Patriot"—Go through this book...to know the *common truths* underlying *all religions*.

Retired Justice Mr. T. V. Seshagiri Iyer:—"Very interesting."

M. R. Ry. B. V. Narasimha Iyer Avl, B.A., B.L.,—"Any one carrying these teachings into practice is sure to attain *beatitude* in the next world and *success* in this. i. e., இஹபர ஸுகம்.

M. R. Ry. S. K. Yegna Narayanier, Avl M. A., Professor of English Pachaiappa's College:—"*Books like this, printed on* art paper in a fine style would make excellent presents to boys leaving an institution or young men starting life. I congratulate you on the *excellence of choice* and the *catholicity of taste evinced* and hope it would serve the noble purpose for which it is intended."

The late Mr. A. Panchapagesa Iyer Avl., M. A.,—"*Excellent morals to pupils.*"

ஐயா,

மகாபாரதக் கதையின் முதல் 10 பர்வங்களை, சுலபமான இங்கிலீஷில் எழுதி வெளியிட்டிருக்கிறேன். இதனையும், மற்றொரு பக்கத்தில் காணும் 'இஹபரசுகம்' 'மகாபாரதவசனம்' "உத்தம பத்தினிகள்', முதலிய எனது தமிழ்ப் புத்தகங்களையும் தங்கள் ஸ்கூல்களிலாவது அல்லது தாங்கள் சிபார்சு செய்யக் கூடிய இதர ஸ்கூல்களின் [illegible] வகுப்புகளில் பாடப்புத்தகமாய் வைப்பிக்கக் கோருகிறேன்.

15, சித்திரகுளம் கீழண்டை வீதி, மயிலாப்பூர், (சென்னை.)

க. சு. சேஷகிரி ஐயர்,
ஆசிரியர், P.S. ஹைஸ்கூல், மயிலாப்பூர்.

18832

(வட ஆர்காடு ஜில்லா) திருவண்ணாமலையில் ஸ்ரீ ரமணீயவாணி புஸ்தகாலயத்தில் விற்பனைக்குக் கிடைக்கும் புத்தகங்களிற் சில:—

1. விவேக சூடாமணி:—ஆதிசங்கராச்சாரியாரது ஸம்ஸ்க்ருத மூலத்துக்குப் பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் அருளிய தமிழ் வசனம். பகவானது திருவுருவப் படமுள்ளது. ஒவ்வொரு ஹிந்துவும் அவசியம் படிக்கவேண்டிய அற்புத புத்தகம். (விலை 6-அணா)

2. ஸ்ரீ ரமண கீதை.—18 அத்யாயமுள்ளது. தேவநாகரத்தில் சுலோகங்களும் அடியில் தமிழ் அர்த்தமும் உள்ள திவ்யமான புத்தகம். (விலை 1-ரூபாய்)

"சுதேசமித்ரன்":—திருவண்ணாமலைக்குச் சிறு வயதிலேயே போய் ஒரு குகையில் இருந்து யோகம் செய்து ப்ரஹ்மஞானம் அடைந்து விளங்கும் ஸ்ரீ ரமண மஹரிஷிகளது ஸ்வாநுபோகத்தையே ஆதாரமாகக் கொண்டு........(வேதாந்த விசாரம் செய்பவர்களுக்குண்டாகும் சந்தேகங்களைப் போக்க) அவர் செய்த உபதேசங்கள். ஒவ்வொரு சுலோகத்தின் கீழும்.....தமிழ் உரை மிகவும் தெளிவாக இருக்கிறது.....ஆத்ம விசாரம் செய்கிறவர்களுக்கு இக்கிரந்தம் கண்டெடுத்த புதையலாகும்.

[மகாபாரத வசனம் (முதற்பாதி) விலை 1-ரூபாய்]

சுதேசபரிபாலினி (ரங்கூன்):—சொல் நடை, வில்லிபாரதச் செய்யுளின் வர்ணனை நடைபோல, படிப்பவர் மனத்தில் விஷயங்களை எதிரில் தோற்றுவிக்கிறது. காலக்ஷேபத்துக்கேற்ற நூலிது. உபாக்யானங்கள் எல்லாம் அழகாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஸமரஸ போதினி:—நமது புராணக் கதைகளின் தத்துவம் சிறுவர் சிறுமிகள் மனதில் ஆழப்படியும்படி.....மிகவும் எளிய தமிழ் நடையில்.....உள்ள இப்புத்தகத்தைத் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பாடப் புத்தகமாக வைத்தல் மிகுந்த பலனை யளிக்கும்.

தேசோபகாரி (ரங்கூன்):—பண்டித பாமர ரஞ்ஜகமாகவும் விளங்கப் பெற்றது.

தெய்வ பக்தன்:—மாணவப் பருவத்துச் சிறுவர் சிறுமிகள் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியது.

தமிழகம்—(கோலாலம்பூர்):—சுருக்கமாகவும் விளக்கமாகவும் இனிய எளிய தமிழ் நடையில் சிறப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இது தமிழ் மக்கள் எல்லாருக்கும் பெரிதும் பயன்படும்.

குமரன்:—கண்டபடியாக எழுதப்படும் நாவல்களை வாங்கிப் படிக்கும் நமது நாட்டுச் சிறுவர்களும் பெண்மக்களும் இதனை வாங்கிப் படித்தல் நலமாகும்.

சுதேசமித்திரன்:—தமிழ் நடை சிறந்ததாக விருக்கிறது

ஹிந்துக்களுக்கு மிக அவசியமான புத்தகங்கள்.

பால ராமாயணம். துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்ற இப்புத்தகத்தை இயற்றியவர், மயிலாப்பூர் கிழக்கு மாடவீதியிலிருக்கும் நாஷனல் கர்ல்ஸ் ஸ்கூல் டீசர், P. மங்களாபாய் அம்மாள். வேண்டுவோர் எழுதிப் பெறலாம். (விலை அணா 6.)

மயிலாப்பூர் (P. S. ஹைஸ்கூல் டீசரும்) சித்ர குளம் கீழண்டை வீதி 15-வது நம்பர் வீட்டில் உள்ளவருமான K. S. சேஷகிரி ஐயரிடம் கிடைக்கும் புஸ்தகங்கள்:—

1. மஹா பாரத வசனம் (முதற்பாதி):—18 பர்வங்களில் முதல் 9 பர்வம் உள்ளது. 18 நாள் போருடன் முடிவது. அச்சிட்ட ஒரு மாதத்துக்குள் 5, 6 ஹைஸ்கூல்களில் (IV form) நான்காவது பாரத்திற்கு (A-க்ரூப் நான் டிடேய்ல்ட் புத்தகமாய்) வைக்கப்பெற்றது. பெதர் வெய்ட் பேபரில் அச்சிடப்பட்டது. (விலை 1 ரூபாய்)

2. இஹ பர சுகம்-அல்லது 50 மஹாத்மாக்கள் ஞானிகளின் மொழிகள். (விலை 8 அணா.) இதுவும் பெதர் வெயிட் (feather-weight) பேபரில் அச்சிடப்பட்டது.

3. Dozen Weapons (இங்கிலீஷில்). பலர் புகழும் புத்தகம் (விலை அணா 8.)

4. The Mahabharata—(இங்கிலீஷில். முதல் 10 பர்வம்) Part I. (விலை 10 அணா). 1924 எப்ரல் மாதத்தில் வெளிவரும்.

5. எல்லாம் நானே. அத்வைத உண்மையை விளக்கும் புத்தகம். (விலை அணா 2.)

6. உத்தம பத்தினிகள். (முதற்பாகம்) சந்திரமதி, லோபாமுத்ரா, சகுந்தலை, தமயந்தி, தாக்ஷாயணி, அருந்ததி, குசேலை, சீதை ஆகிய 8 உத்தமிகளது திவ்ய சரித்திரம் அடங்கிய புஸ்தகம். (விலை 2 அணா).

7. ஈசுவர லீலை—அல்லது சிவபிரானது 64 திருவிளையாடற் சுருக்கம் (விலை 8 அணா.) 1924 எப்ரல் மாதத்தில் வெளிவரும்.

[கூடிய சீக்கிரத்தில் அச்சிடப் பெறும் புத்தகங்கள்].

1. உத்தம பக்தர்கள்—(முதற்பாகம்) மார்க்கண்டேயர், சண்டிகேச்வரர், கண்ணப்பர், சிறுத்தொண்டர், ப்ரஹ்லாதர், ஜயதேவர் நாமதேவர், துருவன் ஆகிய 8 பக்தர்கள் சரிதம் அடங்கியது.

2. (ஸ்ரீமகாவிஷ்ணுவின்) தசாவதார வசனம். (8 அணா)

3. Inspiring Thoughts—வெவ்வேறு காலத்தில் பல்வேறு தேசங்களில் உதித்த மஹான்கள் அவதார மூர்த்திகளில் 60 பேர்களுடைய திவ்ய மொழிகளை 20 வகையாகப் பிரித்துக் காட்டும் இங்கிலீஷ் புத்தகம்.